ஒப்புதல், அதனுடைய பயன் விகிதாச்சாரம் இவைகள் எல்லாம் அரசு ஒப்புதல் கொடுப்பதற்கு முன்னால் பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகவே, திட்டங்களைத் தயாரித்துவிட்டால். ஒப்புதலுக்கு வந்துவிட்டது என்று நாம் பொருள் கொள்ள முடியாது. ஆகவே, இந்தத் திட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சியர் ஒத்திசைவு வழங்கவில்லை; பயன் விகிதாச்சாரம் போதவில்லை என்று கூறி இருக்கிறார். ஆகவே, பல்வேறு ஆய்வுகளில் இந்தத் திட்டம் இருக்கிற காரணத்தால் இது பற்றி விரிவான ஒரு ஆய்வினை மேற்கொண்டதற்குப் பின்னாலேதான் எப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதை நான் தெரிவிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 511 திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிக்கைபாபு இருக்கையில் இல்லை

வினா எண் 512—திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

512—

எறார்பட்டி. சல்வார்பட்டி. டி. சுப்பிரமணியபுரம், பூசாரிபட்டி ஆகிய கிராமங்களுக்கு வைப்பாற்றிலிருந்து குடிநீர் வழங்கல்

*9898—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) எறார்பட்டி, சல்வார்பட்டி, டி. சுப்பிரமணியபுரம், பூசாரிபட்டி ஆகிய நான்கு கிராமங்களுக்கும் வைப்பாற்றிலிருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது? எவ்வளவு மதிப்பீட்டில் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது எறார்பட்டி, சல்வார்பட்டி, டி. சுப்பிரமணியபுரம், பூசாரிபட்டி ஆகிய நான்கு கிராமங்களுக்கு வைப்பாற்றிலிருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1993 ஏப்ரல் 28]

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராமங்களும் எந்தக் குடிநீர் ஆதாரமும் இல்லாமல், தற்போது மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. இவை வைப்பாற்றிலிருந்து ஒரு கிலோமீட்டர் அருகில் இருந்தும், அங்கே ஏற்கெனவே போடப்பட்ட போர் வெல்களிலிருந்தும் பயன் பெற முடியாத சூழ்நிலைதான் இருக்கிறது. அங்கேயிருந்து ஏழாயிரம் பண்ணைக்கு 20 கிலோமீட்டர் பைப்லைன் அமைத்து, எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே இதை மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆண்டே இதைப் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று முதலிலே சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், வினா எண் 513, திரு. எஸ். எஸ். ராம சுப்பு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

513—

பெத்த நாடார் பட்டி ஊராட்சி 10-வது வார்டு அருந்ததியருக்கு காலனிக் வீடுகள்.

*10405— திரு. எஸ். எஸ். ராம சுப்பு :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள பெத்த நாடார் பட்டி ஊராட்சி 10-வது வார்டு அருந்ததியர் மக்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே :